6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை
தமிழ்


சொல்லும் பொருளும்

ஆறாம் வகுப்பு

1. நிருமித்த - உருவாக்கிய
2. சமூகம் - மக்கள் குழு
3. விளைவு - விளைச்சல்
4. அசதி - சோர்வு
5. ஆழிப் பெருக்கு - கடல் கோள்
6. ஊழி - நீண்டதொருகாலப்பகுதி
7. மேதினி - உலகம்
8. உள்ளப்பூட்டு - அறிய விரும்பாமை
9. திங்கள் - நிலவு
10. கொங்கு - மகரந்தம்
11. அலர் - மலர்தல்
12. திகிரி - ஆணைச்சக்கரம்
13. பொற்கோட்டு - பொன்மயமானசிகரத்தில்
14. மேரு - இமயமலை
15. நாமநீர் - அச்சம் தரும் கடல்
16. அளி - கருணை
17. காணி - நில அளவைக் குறிக்கும் சொல்
18. மாடங்கள் - மாளிகையின் அடுக்குகள்
19. சித்தம் - உள்ளம்
20. இயன்றவரை - முடிந்தவரை
21. ஒருமித்து - ஒன்றுபட்டு
22. ஔடதம் - மருந்து
23. மாசற - குறையில்லாமல்
24. சீர்தூக்கின் - ஒப்பிட்டு ஆராய்ந்து
25. தேசம் - நாடு
26. தூற்றும் படி - இகழும் படி
27. மூத்தோர் - பெரியோர்
28. மேதைகள் - அறிஞர்கள்
29. மாற்றார் - மற்றவர்
30. நெறி - வழி
31. வற்றாமல் - அழியாமல்
32. நன்றியறிதல் - பிறர் செய்த உதவியை மறவாமை
33. ஒப்புரவு - பிறருக்கு உதவி செய்தல்



34. நட்டல் - நட்புக் கொள்ளுதல்
35. நந்தவனம் - பூஞ்சோலை
36. பார் - உலகம்
37. பண் - இசை
38. இழைத்து - செய்து
39. மல்லெடுத்த - வலிமை பெற்ற
40. சமர் - போர்
41. நல்கும் - தரும்
42. கழனி - வயல்
43. மறம் - வீரம்
44. எக்களிப்பு - பெருமகிழ்ச்சி
45. கலம் - கப்பல்
46. ஆழி - கடல்
47. கதிர்ச்சுடர் - கதிரவனின் ஒளி
48. மின்னல்வரி - மின்னல் கோடுகள்
49. அரிச்சுவடி - அகரவரிசை எழுத்துகள்
50. மெய் - உண்மை
51. தேசம் - நாடு
52. தண்டருள் - குளிர்ந்த கருணை
53. கூர் - மிகுதி
54. செம்மையருக்கு - சான்றோருக்கு
55. ஏவல் - தொண்டு
56. பராபரமே - மேலான பொருளே
57. பணி - தொண்டு
58. எய்தும் - கிடைக்கும்
59. எல்லாரும் - எல்லா மக்களும்
60. அல்லாமல் - அதைத் தவிர
61. சுயம் - தனித்தன்மை
62. உள்ளீடுகள் - உள்ளே இருப்பவை
63. அஞ்சினர் - பயந்தனர்
64. கருணை - இரக்கம்
65. வீசும் - வீசும்
66. ஆகாது - முடியாது
67. பார் - உலகம்
68. நீள்நிலம் - பரந்த உலகம்
69. முற்றும் - முழுவதும்



70. மாரி - மழை
71. கும்பி - வயிறு
72. பூதலம் - பூமி

ஏழாம் வகுப்பு

1. ஊக்கிவிடும் - ஊக்கப்படுத்தும்
2. விரதம் - நோன்பு
3. குறி - குறிக்கோள்
4. பொழிகிற - தருகின்ற
5. ஒப்புமை - இணை
6. அற்புதம் - விந்தை
7. முகில் - மேகம்
8. உபகாரி - வள்ளல்
9. ஈன்று - பெற்று
10. கொம்பு - கிளை
11. அதிமதுரம் - மிகுந்த சுவை
12. களித்திட - மகிழ்ந்திட
13. நச்சரவம் - விடமுள்ள பாம்பு
14. விடுதி - தங்கும் இடம்
15. பரவசம் - மகிழ்ச்சிப் பெருக்கு
16. துஷ்டி கேட்டல் - துக்கம் விசாரித்தல்
17. சிற்றில் - சிறு வீடு
18. கல் அளை - கற்குகை
19. யாண்டு - எங்கே
20. ஈன்ற வயிறு - பெற்றெடுத்த வயிறு
21. சூரன் - வீரன்
22. பொக்கிஷம் - செல்வம்
23. சாஸ்தி - மிகுதி
24. விஸ்தாரம் - பெரும்பரப்பு
25. வாரணம் - யானை
26. பரி - குதிரை
27. சிங்காரம் - அழகு
28. கமுகு - பாக்கு
29. மதலை - தூண்

30. நெகிழி - தீச்சுடர்
31. அழுவம் - கடல்
32. வேயா மாடம் - வைக்கோல் போன்றவற்றால் வேயப்படாது திண்மையாகச் சாந்து பூசப்பட்ட மாடம்
33. சென்னி - உச்சி
34. உரவுநீர் - பெருநீர்ப் பரப்பு
35. கரையும் - அழைக்கும்
36. உரு - அழகு
37. போழ - பிளக்க
38. வங்கூழ் - காற்று
39. நீகான் - நாவாய் ஓட்டுபவன்
40. வங்கம் - கப்பல்
41. எல் - பகல்
42. கோடு உயர் - கரை உயர்ந்த
43. மாட ஒள்ளெரி - கலங்கரை விளக்கம்
44. யத்தனிக்கும் - முயலும்
45. வெற்பு - மலை
46. கழனி - வயல்
47. நிகர் - சமம்
48. பரிதி - கதிரவன்
49. அன்னதோர் - அப்படி ஒரு
50. கார்முகில் - மழை மேகம்
51. துயின்றிருந்தார் - உறங்கியிருந்தார்
52. வைப்புழி - பொருள் சேமித்து வைக்கும் இடம்
53. கோட்படா - ஒருவரால் கொள்ளப்படாது
54. வாய்த்து ஈயில் - வாய்க்கும்படி கொடுத்தாலும்
55. விச்சை - கல்வி
56. பிரும்மாக்கள் - படைப்பாளர்கள்
57. நெடி - நாற்றம்
58. மழலை - குழந்தை
59. வனப்பு - அழகு
60. பூரிப்பு - மகிழ்ச்சி
61. மேனி - உடல்
62. வண்கீரை - வளமான கீரை
63. முட்டப்போய் - முழுதாகச் சென்று
64. மசிக்கல் - கறக்கல்

65. பரி - குதிரை
66. கால் - வாய்க்கால், குதிரையின் கால்
67. மாரி - மழை
68. ஊறந்திருந்த - வறண்டிருந்த
69. புகவா - உணவாக
70. மடமகள் - இளமகள்
71. நல்கினாள் - கொடுத்தாள்
72. முன்றில் - வீட்டின் முன் இடம் (திண்ணை) இங்கு வீட்டைக் குறிக்கிறது.
73. குழி - நில அளைப்பெயர்
74. சாண் - நீட்டல் அளவைப்பெயர்
75. மணி - முற்றிய நெல்
76. சும்மாடு - பாரம் சுமப்பவர்கள் தலையில் வைத்துக்கொள்ளும் துணிச்சுருள்
77. சீலை - புடவை
78. மடை - வயலுக்கு நீர் வரும் வழி
79. கழலுதல் - உதிர்தல்
80. வையம் - உலகம்
81. வெய்ய - வெப்பக்கதிர் வீசும்
82. சுடர்ஆழியான் - ஒளிவிடும் சக்கரத்தை உடைய திருமால்
83. இடர்ஆழி - துன்பக்கடல்
84. சொல்மாலை - பாமாலை
85. தகளி - அகல் விளக்கு
86. நாரணன் - திருமால்
87. ஞானம் - அறிவு
88. வித்து - விதை
89. ஏண் - வெற
90. நிலன் - நிலம்
91. களை - வேண்டாத செடி
92. பைங்கூழ் - பசுமையான பயிர்
93. வன்சொல் - கடுஞ்சொல்
94. சாந்தம் - அமைதி
95. மகத்துவம் - சிறப்பு
96. பேதங்கள் - வேறுபாடுகள்
97. தாரணி - உலகம்
98. தத்துவம் - உண்மை
99. கருணை - இரக்கம்

42 ஓரெழுத்து ஒரு மொழிகளும் அவற்றின் பொருளும்

1. ஆ - பசு
2. ஈ - கொடு
3. ஊ - இறைச்சி
4. ஏ - அம்பு
5. ஐ - தலைவன்
6. ஓ - மதகுநீர் தாங்கும் பலகை
7. கா - சோலை
8. கூ - பூமி
9. கை - ஒழுக்கம்
10. கோ - அரசன்
11. சா - இறந்துபோ
12. சீ - இகழ்ச்சி
13. சே - உயர்வு
14. சோ - மதில்
15. தா - கொடு
16. தீ - நெருப்பு
17. தூ - தூய்மை
18. தே - கடவுள்
19. தை - தைத்தல்
20. நா - நாவு
21. நீ - முன்னிலை ஒருமை
22. நே - அன்பு
23. நை - இழிவு
24. நோ - வறுமை
25. பா - பாடல்
26. பூ - மலர்
27. பே - மேகம்
28. பை - இளமை
29. போ - செல்
30. மா - மாமரம்
31. மீ - வான்
32. மூ - மூப்பு
33. மே - அன்பு
34. மை - அஞ்சனம்
35. மோ - முகத்தல்
36. யா - அகலம்
37. வா - அழைத்தல்
38. வீ - மலர்
39. வை - புல்
40. வௌ - கவர்
41. நொ - நோய்
42. து - உண்

* இவற்றில் நொ, து ஆகிய இரண்டு சொற்களைத் தவிர ஏனைய நாற்பது சொற்களும் நெடில் எழுத்துகளாக அமைந்தவை.

* நன்னூல் என்னும் இலக்கண நூலை எழுதிய பவணந்தி முனிவர் தமிழில் 42 ஓரெழுத்து ஒருமொழிகள் உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

எட்டாம் வகுப்பு

1. நிரந்தரம் - காலம் முழுமையும்
2. வைப்பு - நிலப்பகுதி
3. சூழ்கலி - சூழ்ந்துள்ள அறியாமை இருள்
4. வண்மொழி - வளமிக்க மொழி
5. இசை - புகழ்
6. தொல்லை - பழமை, துன்பம்
7. விசும்பு - வானம்
8. மயக்கம் - கலவை
9. இருதிணை - உயர்திணை, அஃறிணை
10. வழாஅமை - தவறாமை
11. ஐம்பால் - ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்
12. மரபு - வழக்கம்
13. திரிதல் - மாறுபடுதல்
14. செய்யுள் - பாட்டு
15. துழாஅல் - தழுவுதல்(பயன்படுத்துதல்
16. தூண்டுதல் - ஆர்வம் கொள்ளுதல்
17. எ·ரம் - இரத்தம்
18. குழவு - இசைக்கருவி
19. நன்செய் - நிறைந்த நீர்வளத்தோடு பயிர்கள் விளையும் நிலம்
20. புன்செய் - குறைந்த நீரால் பயிர்கள் விளையும் நிலம்
21. வள்ளைப்பாட்டு - நெல்குத்தும்போது பாடப்படும் பாடல்
22. பயிலுதல் - படித்தல்
23. நாணம் - வெட்கம்
24. செஞ்சொல் - திருந்திய சொல்
25. முகில் - மேகம்
26. கொழுகலங்கி - மிக வருந்தி
27. சம்பிரமுடன் - முறையாக
28. சேகரம் - கூட்டம்
29. காங்கேய நாடு - கொங்குமண்டலத்தின் 24 நாடுகளுள் ஒன்று
30. வின்னம் - சேதம்
31. வாகு - சரியாக
32. காலன் - எமன்

33. மொத்த - மிகவும்
34. தீர்வன - நீங்குபவை
35. உவசமம் - அடங்கி இருத்தல்
36. நிழல் இகழும் - ஒளி பொருந்திய
37. பேர்தற்கு - அகற்றுவதற்கு
38. திரியோகமருந்து - மூன்று யோகமருந்து
39. தெளிவு - நற்காட்சி
40. திருத்தன - தன்மையுடையன
41. கூற்றவா - பிரிவுகளாக
42. ஆணாய் - அணிகலன்களை அணிந்தவளே
43. பிணி - துன்பம், நோய்
44. ஓர்தல் - நல்லறிவு
45. பிறவார் - பிறக்கமாட்டார்
46. நித்தம் நித்தம் - நாள் தோறும்
47. வையம் - உலகம்
48. மட்டு - அளவு
49. பேணுவையேல் - பாதுகாத்தல்
50. சாண்ட - நன்றி
51. திட்டுமுட்டு - தடுமாற்றம்
52. கலன் - அணிகலன்
53. மிளிர - ஒளிர
54. தடம் - அடையாளம்
55. அகம்பாவம் - செருக்கு
56. பண் - இசை
57. கனகச்சுனை - பொன் வண்ண நீர்நிலை
58. மதவேழங்கள் - மதயானைகள்
59. முரலும் - முழங்கும்
60. பழவெய் - முதிர்ந்த மூங்கில்
61. அலந்தவர் - வறியவர்
62. கிளை - உறவினர்
63. செறாஅமை - வெறுக்காமை
64. பேதையார் - அறிவற்றவர்
65. நோன்றல் - பொறுத்தல்
66. மறாஅமை - மறவாமை
67. போற்றார் - பகைவர்
68. பொறை - பொறுமை


69. வாரி - வருவாய்
70. வைகுக - தங்குக
71. எஞ்சாமை - குறைவின்றி
72. ஓதை - ஓசை
73. முட்டாது - தட்டுப்பாடின்றி
74. வெரீஇ - அஞ்சி
75. ஒட்டாது - வாட்டம் இன்றி
76. யாணர் - புதுவருவாய்
77. மறலி - காலன்
78. கரி - யானை
79. தூசு - புகர்
80. அருவர் - தமிழர்
81. உடன்றன - சினந்து எழுந்தன
82. வழிவர் - நழுவி ஓடுவர்
83. பிலம் - மலைக்குகை
84. மண்டுதல் - நெருங்குதல்
85. இறைஞ்சினர் - வணங்கினர்
86. முழை - மலைக்குகை
87. சீவன் - உயிர்
88. வையம் - உலகம்
89. சத்தியம் - உண்மை
90. சுபதம் - சூளை
91. ஆனந்த தரிசனம் - மகிழ்வான காட்சி
92. மோகித்து - விரும்பி
93. நமன் - எமன்
94. சித்தம் - உள்ளம்
95. நம்பர் - அடியார்
96. நாணாமே - கூசாமல்
97. உய்ம்மின் - ஈடேறுங்கள்
98. ஈயில் - வழங்கினால்
99. படமாடக்கோயில் - படங்கள் அமைந்த மாடங்களையுடைய கோவில்
100. பகராய் - தருவாய்
101. பராபரம் - மேலான பொருள்
102. ஆனந்த வெள்ளம் - இன்பப் பெருக்கு
103. அறுத்தவருக்கு - நீக்கியவருக்கு
104. நிறை - மேன்மை

105. அழுக்காறு - பொறாமை
106. பொறை - பொறுமை
107. மதம் - கொள்கை
108. பொச்சாப்பு - சோர்வு
109. மையல் - விருப்பம்
110. ஓர்ப்பு - ஆராய்ந்து தெளிதல்
111. இகல் - பகை
112. மன்னும் - நிலைபெற்ற


ஒன்பதாம் வகுப்பு

1. குறம், பள்ளு - சிற்றிலக்கிய வகைகள்
2. மூன்றினம் - துறை, தாழிசை, விருத்தம்
3. திறமெல்லாம் - சிறப்பெல்லாம்
4. சிந்தாமணி - சிதறாத மணி (சீவகசிந்தாமணி)
5. சிந்து - ஒருவகை இசைப்பாடல்
6. முக்குணம் - மூன்று குணங்கள்
   1. சத்துவம் - அமைதி, மென்மை ஆகியவற்றைச் சுட்டும் குணம்.
   2. இராசசம் - போர், தீவிரமான செயல்களைக் குறிக்கும் குணம்.
   3. தாமசம் - சோம்பல், தாழ்மை போன்றவற்றைக் குறிக்கும் குணம்.
7. பத்துக்குணம் - செறிவு சமநிலை முதலிய பத்துக்குண அணிகள்
8. வண்ணங்கள் ஐந்து - வெள்ளை, சிவப்பு, கறுப்பு, மஞ்சள், பச்சை
9. வண்ணம் நூறு - குறில், அகவல், தூங்கிசை, வண்ணம் முதலாக இனமெல்லிசை வண்ணம் ஈறாக நூறு.
10. ஊனரசம் - குறையுடைய சுவை
11. நவரசம் - வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், கோபம், நகை, சமநிலை, ஆகிய ஒன்பது சுவை
12. வனப்பு - அழகு
    (அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு.)
    ஆகிய எட்டும் தமிழுக்குரிய அழகுகள்.

13. இந்து - உட்கார
14. கந்தம் - மணம்
15. மிசை - மேல்
16. விசனம் - கவலை
17. மா - வண்டு
18. மது - தேன்
19. வாவி - பொய்கை
20. வார் முதல் - நெற்பயிர்
21. தரளம் - முத்து
22. பணிலம் - சங்கு
23. வரம்பு - வரப்பு
24. கழை - கரும்பு
25. கா - சோலை
26. இழை - சிறு கிளை
27. அரும்பு - மலர் மொட்டு
28. மாடு - பக்கம்
29. நெருங்குவளை - நெருங்கிகின்ற சங்குகள்
30. கோடு - குளக்கரை
31. ஆடும் - நீராடும்
32. மேதி - எருமை
33. துதைந்து எழும் - கலக்கி எழும்
34. கன்னி வாளை - இளமையான வாளைமீன்
35. சூடு - நெல் அரிக்கட்டு
36. சுரிவளை - சங்கு
37. தேறல் - தேன்
38. பகடு - எருமைக்கடா
39. பாண்டில் - வட்டம்
40. சிமயம் - மலையுச்சி
41. நாளிகேரம் - தென்னை
42. நாரந்தம் - நாரத்தை
43. கோளி - அரசமரம்
44. சாலம் - ஆச்சாமரம்
45. தமாலம் - பச்சிலை மரம்
46. இரும்போந்து - பருத்த பனைமரம்
47. சந்து - சந்தன மரம்
48. நாகம் - நாகமரம்



49. காஞ்சி - ஆற்றுப்பூவரசு
50. யாக்கை - உடம்பு
51. புணரியோர் - தந்தவர்
52. புன்புலம் - புல்லிய நிலம்
53. தாட்கு - முயற்சி, ஆளுமை
54. தள்ளாதோர் இவண் } - குறைவில்லாது நீர் நிலை
தள்ளாதோரே } அமைப்பவர்கள் குறைவில்லாது புகழுடையவர்களாக விளங்குவார்கள்
55. சமயக் கணக்கர் - சமயத் தத்துவவாதிகள்
56. பாடைமாக்கள் - பல மொழிபேசும் மக்கள்
57. கழீஇ - ஒன்றுகூடி
58. தோம் - குற்றம்
59. கோட்டி - மன்றம்
60. பொலம் - பொன்
61. வேதிகை - திண்ணை
62. தூணம் - தூண்
63. தாமம் - மாலை
64. கதலிகைக் கொடி - சிறு சிறு கொடியாகப் பல கொடிகள் கட்டியது.
65. காழூன்று கொடி - கொம்புகளில் கட்டும் கொடி
66. விலோதம் - துணியாலான கொடி
67. வசி - மழை
68. செற்றம் - சினம்
69. கலாம் - போர்
70. துருத்தி - ஆற்றிடைக்குறை (ஆற்றின் நடுவே இருக்கும் மணல்திட்டு)
71. வையம் - உலகம்
72. மாக்கடல் - பெரிய கடல்
73. இயற்றுக - செய்க
74. மின்னாளை - மின்னலைப் போன்றவளை
75. மின்னாள் - ஒளிர மாட்டாள்
76. கனல் - நெருப்பு
77. தாழி - சமைக்கும் கலன்
78. அணித்து - அருகில்
79. தவிர்க்கஒணா - தவிர்க்க இயலாத
80. யாண்டும் - எப்பொழுதும்




81. களர்நிலம் - பண்படாத நிலம்
82. நவிலல் - சொல்லல்
83. சீவாது - முதுமை அடையாமல்
84. நாறுவ - முளைப்ப
85. தாவா - கெடாதிருத்தல்
86. மைவனம் - மலைநெல்
87. முருகியம் - குறிஞ்சிப்பறை
88. பூஞ்சினை - பூக்களை உடைய கிளை
89. சிறை - இறகு
90. சாந்தம் - சந்தனம்
91. தூவை - நாகணவாய்ப் பறவை
92. பொலம் - அழகு
93. கடறு - காடு
94. முக்குழல் - கொன்றை, ஆம்பல், மூங்கில் ஆகியவற்றால் ஆன குழல்கள்.
95. பொலி - தானியக்குவியல்
96. உழை - ஒரு வகை மான்
97. வாய்வெரீஇ - சோர்வால் வாய் குழறுதல்
98. குரம்பை - குடில்
99. இனைந்து - துன்புறுதல்
100. உயங்குதல் - வருந்துதல்
101. படிக்குஉற - நிலத்தில் விழ
102. கோடு - கொம்பு
103. கல் - மலை
104. முருகு - தேன், மணம், அழகு
105. மல்லல் - வளம்
106. செறு - வயல்
107. கரிக்கோடு - யானைத்தந்தம்
108. போர் - வைக்கோல் போர்
109. புரைதப - குற்றமின்றி
110. தும்பி - ஒருவகை வண்டு
111. துவரை - பவளம்
112. மரை - தாமரை மலர்
113. விசும்பு - வானம்
114. மதியம் - நிலவு
115. தீபம் - விளக்கு

116. கதிர் - நடனம்
117. தாமம் - மாலை
118. தெங்கு - தேங்காய்
119. இசை - புகழ்
120. வருக்கை - பலாப்பழம்
121. நெற்றி - உச்சி
122. மால்வரை - பெரியமலை
123. மடுத்து - பாய்ந்து
124. கொழுநிதி - திரண்ட நிதி
125. மருப்பு - கொம்பு
126. வெறி - மணம்
127. கழனி - வயல்
128. செறி - சிறந்த
129. இரிய - ஓட
130. சூல் - கரு
131. அடிசில் - சோறு
132. மடிவு - சோம்பல்
133. கொடியனார் - மகளிர்
134. நற்றவம் - பெருந்தவம்
135. வட்டம் - எல்லை
136. வெற்றம் - வெற்றி
137. அள்ளல் - சேறு
138. பழனம் - நீர் மிக்க வயல்
139. வெரீஇ - அஞ்சி
140. பார்ப்பு - குஞ்சு
141. நாவலோ - நாள் வாழ்க என்பது போன்ற வாழ்த்து
142. இசைத்தல் - ஆரவாரத்தோடு கூவுதல்
143. நந்து - சங்கு
144. கமுகு - பாக்கு
145. முத்தம் - முத்து
146. புரிசை - மதில்
147. அணங்கு - தெய்வம்
148. சில்காற்று - தென்றல்
149. புழை - சாளரம்
150. மாகால் - பெருங்காற்று
151. முந்நீர் - கடல்


152. பணை - முரசு
153. கயம் - நீர்நிலை
154. ஓவு - ஓவியம்
155. நியமம் - அங்காடி
156. விண் - வானம்
157. ரவி - கதிரவன்
158. கமுகு - பாக்கு
159. அறம் - நற்செயல்
160. வெகுளி - சினம்
161. ஞானம் - அறிவு
162. விரதம் - மேற்கொண்ட நன்னெறி
163. நசை - விருப்பம்
164. நல்கல் - வழங்குதல்
165. பிடி - பெண்யானை
166. வேழம் - ஆண்யானை
167. யா - ஒரு வகை மரம், பாலை நிலத்தில் வளர்வது.
168. பொளிக்கும் - உரிக்கும்
169. ஆறு - வழி

10ஆம் வகுப்பு

1. துய்ப்பது - கற்பது, தருதல்
2. மேவலால் - பொருந்துதல், பெறுதல்
3. மயலுறுத்து - மயங்கச்செய்
4. ப்ராண ரஸம் - உயிர்வளி
5. வயத்துடன் - சீராக
6. நனந்தலை உலகம் - அகன்ற உலகம்
7. நேமி - வலம்புரிச்சங்கு
8. கோடு - மலை
9. கொடுஞ்செலவு - விரைவாகச் செல்லுதல்
10. நறுவீ - நறுமணமுடைய மலர்கள்
11. தூஉய் - தூவி
12. விரிச்சி - நற்சொல்
13. சுவல் - தோள்
14. அருகுற - அருகில்
15. சேமம் - ஒருவகை நலம் வினவிக் கூறும் விருந்தோம்பல் சொற்கள்




16. அசைஇ - இளைப்பாறி
17. கடும்பு - சுற்றம்
18. ஆரி - அருமை
19. வயிரியம் - கூத்தர்
20. இறடி - தினை
21. அல்கி - தங்கி
22. நரலும் - ஒலிக்கும்
23. படுகர் - பள்ளம்
24. வேவை - வெந்தது
25. பொம்மல் - சோறு
26. சுழனும் - சுட்டாலும்
27. மாளாத - தீராத
28. மாயம் - விளையாட்டு
29. விசும்பு - வானம்
30. உறழி - யுகம்
31. உறஞ் - சிறை
32. தண்பெயல் - குளிர்ந்த மழை
33. ஆர்தருபு - வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த
34. பீடு - சிறப்பு
35. ஈண்டி - செறிந்து திரண்டு.
36. கேள்வியினான் - நூல் வல்லான்
37. கேண்மையினான் - நட்பினன்
38. தார் - மாலை
39. முடி - தலை
40. முனிவு - சினம்
41. அகத்து உவகை - மனமகிழ்ச்சி
42. தமர் - உறவினர்
43. நீபவனம் - கடம்பவனம்
44. மீனவன் - பாண்டிய மன்னன்
45. கவரி - சாமரை (கவரிமாவின் முடியில் செய்த விசிறியாகிய அரசச் சின்னம்)
46. நுவன்ற - சொல்லிய
47. என்னா - அசைச் சொல்
48. பண்டி - வயிறு
49. அசும்பிய - ஒளிவீசுகிற
50. முச்சி - தலையுச்சிக் கொண்டை




51. சுண்ணம் - நறுமணப்பொடி
52. காருகர் - நெய்பவர் (சாலியர்)
53. தூசு - பட்டு
54. துகிர் - பவளம்
55. வெறுக்கை - செல்வம்
56. நொடை - விலை
57. பாசவர் - வெற்றிலை விற்போர்
58. ஓசுநர் - எண்ணெய் விற்போர்
59. மண்ணுள் வினைஞர் - ஓவியர்
60. மண்ணீட்டாளர் - சிற்பி
61. கிழி - துணி
62. சேக்கை - படுக்கை
63. யாக்கை - உடல்
64. பிணித்து - கட்டி
65. வாய்ந்த - பயனுள்ள
66. இளங்கூழ் - இளம்பயிர்
67. தயங்கி - அசைந்து
68. காய்ந்தேன் - வருந்தினேன்
69. கொம்பு - கிளை
70. புழை - துளை
71. கான் - காடு
72. தேம்ப - வாட
73. அசும்பு - நிலம்
74. உய்முறை - வாழும் வழி
75. ஓர்ந்து - நினைத்து
76. கடிந்து - விலக்கி
77. உவமணி - மணமலர்
78. படலை - மாலை
79. துணர் - மலர்கள்

11ஆம் வகுப்பு

1. பால் - வகை
2. இயல்பு - பண்பு
3. மாடம் - மாளிகை
4. அமை - மூங்கில்



5. வட ஆரிநாடு - திருமலை
6. தென் ஆரிநாடு - குற்றாலம்
7. ஆரளி - மொய்க்கின்ற வண்டு
8. இந்துளம் - இந்தளம் எனும் ஒரு வகைப் பண்
9. இடங்கணி - சங்கிலி
10. உளம் - உள்ளான் என்ற பறவை
11. கமல வாவி - தாமரைத் தடாகம்
12. தரளம் - முத்து
13. கா - சோலை
14. முகில்தொகை - மேகக் கூட்டம்
15. மஞ்ஞை - மயில்
16. கொண்டல் - கார்கால மேகம்
17. மண்டலம் - உலகம்
18. வாவித் தரங்கம் - குளத்தில் எழுந்த அலை
19. அளி உலாம் - வண்டு மொய்க்கின்ற
20. காயா, கொன்றை, நெய்தல், முல்லை, தளவம், பிடவம் } - மழைக்கால மலர்கள்
21. மோது - மோட்டு
22. அலர்ந்து - மலர்ந்து
23. கவினி - அழகுற
24. ஜகம் - உலகம்
25. புயம் - தோள்
26. வரை - மலை
27. வன்னம் - அழகு
28. கழுகாசலம் - கழுகு மலை
29. த்வஜஸ்தம்பம் - கொடி மரம்
30. சலராசி - கடலில் வாழும் மீன் முதலிய உயிர்கள்
31. விலாசம் - அழகு
32. நூபுரம் - சிலம்பு
33. மாசுணம் - பாம்பு
34. இஞ்சி - மதில்
35. உம்பர் - தேவர்
36. புயல் - மேகம்
37. கறங்கும் - சுழலும்
38. சிதவல் - தலைப்பாகை
39. தண்டு - ஊன்றுகோல்



40. துமியர் - தனித்தவர்
41. இனிதல் - வெறுத்தல்
42. துஞ்சல் - சோம்பல்
43. அயர்வு - சோர்வு
44. மாட்சி - பெருமை
45. நோன்மை - வலிமை
46. தாள் - முயற்சி
47. மாழ்கி - தொட்டால் சுருங்கி எனும் தாவரம்
48. மாழ்குதல் - மயங்குதல்
49. சேதனை - அறிவு
50. அரும்புதல் - பருத்தல்
51. இயைபுஇல் - பொருத்தமற்றது
52. ஆக்கம் - உயிருடைத்து
53. இற்றிலை - அறியவில்லை
54. பெருந்தவத்தாய் - பெரிய தவமுடையவர்
55. வாய்த்துரை - பொருத்தமான உரை
56. வாமன் - அருகன்
57. தேறு - தெளிவாக
58. செலவு - வழி
59. பரிப்பு - இயக்கம்
60. துப்பு - வலிமை
61. கூம்பு - பாய்மரம்
62. புகாஅர் - ஆற்றுமுகம்
63. தகாஅர் - தகுதியில்லார்
64. பல்தாரத்த - பல்வகைப்பட்ட பண்டம்
65. பிரசம் - தேன்
66. புடைத்தல் - கோல்கொண்டு ஓச்சுதல்
67. கொழுநன் இல் - கணவனுடைய வீடு
68. வறன் - வறுமை
69. கொழுஞ்சோறு - பெருஞ்செல்வம்
70. உள்ளாள் - நினையாள்
71. மதுகை - பெருமிதம்
72. இகக்கும் - நீக்கும்
73. இழுக்கு - குற்றம்
74. வினாயவை - கேட்டவை
75. வரை - மலை

76. கம்பலை - பேரொலி
77. புடவி - உலகம்
78. பெறுதல் ← எய்துதல்
79. வாரணம் - யானை
80. பூரணம் - நிறைவு
81. நல்கல் - அளித்தல்
82. வதுவை - திருமணம்
83. கோன் - அரசன்
84. மறுவிலா - குற்றம் இல்லாத
85. துன்ன - நெருங்கிய
86. பொறிகள் - ஐம்புலன்
87. தெண்டிரை - தெள்ளிய நீரலை
88. விண்டு - திறந்து
89. மண்டிய - நிறைந்த
90. காய்ந்த - சிறந்த
91. நீள் - மார்க்கம்
92. கொண்மூ - மேகம்
93. சமம் - போர்
94. விசும்பு - வானம்
95. ஆரவாரம் ← அரவம்
96. ஆயம் - சுற்றம்
97. தழலை, தட்டை - பறவைகளை ஓட்டும் கருவிகள்
98. கொத்து - பூமாலை
99. குழல் - கூந்தல்
100. நாங்கூழ் - மண்புழு
101. கோலத்து நாட்டார் - கலிங்க நாட்டார்
102. வரிசை - சன்மானம்
103. காயில் - வெகுண்டால்
104. அந்தரம் - இழவு
105. அயன் - பிரமன்
106. மால் - விஷ்ணு
107. ஆலாலம் - நஞ்சு
108. ஓதுக - சொல்க
109. முழக்கம் - ஓங்கி ஒலித்தல்
110. கனிகள் - உலோகங்கள்
111. மணி - மாணிக்கம்

112. படிகம் - பளபளப்பான கல்
113. மீட்சி - விடுதலை
114. நவை - குற்றம்
115. படி - உலகம்
116. பதி - நாடு
117. பிழைப்பு - வாழ்தல்
118. நிரயம் - நரகம்
119. ஒழிய - நோய் நீங்கிய
120. புரையோர் - சான்றோர்
121. யாணர் - புது வருவாய்
122. மருண்டனன் - வியப்படைந்தேன்
123. மன்னுயிர் - நிலைபெற்றுள்ள உயிர்த்தொகுதி
124. தண்டா - ஓயாத
125. கடுந்துப்பு - மிகுவலிமை
126. ஓமம் - பாதுகாப்பு
127. ஓடியா - குறையா
128. நயந்து - விரும்பிய
129. தரங்கம் - கடல்
130. கவனம் - வேகம்
131. துரகதம் - குதிரை
132. வென்றி - வெற்றி
133. விசயன் - அருச்சுனன்
134. நான்மறை - நான்குவேதங்கள்
135. யாக்கை - உடல்
136. ஒழிவிலாது - ஒன்றும் மிச்சமின்றி
137. அயன் - பிரமன்
138. எழிலிறகு - பெரிது
139. அங்கை - உள்ளங்கை
140. அவுணன் - அரக்கன் (மாவலிவர்த்தி)
141. மல்லல் - வளமை
142. தொடையல் - மாலை
143. சூரன்மாமதலை - கதிரவன்மகன்
144. உற்பவம் - பிறவி
145. கடிநகர் - காவல் உடைய நகரம்
146. காண்டி - காண்க
147. பூம்பராகம் - பூவில் உள்ள மகரந்தம்

148. ஆக இலா – குற்றம் இலாத
149. தோட்டி – துரட்டி
150. அயம் – ஆடு, குதிரை
151. புக்க விட்டு – போகவிட்டு
152. சீரிய தூளி – நுண்ணிய மணல்
153. சிறுகால் – வாய்க்கால்
154. பரல் – கல்
155. முந்நீர் மடு – கடலாகிய நீர்நிலை
156. அண்டயோனி – ஞாயிறு
157. சாறு – பாய்
158. கூட்டியது – சேகரித்தது
159. எழிலி – மேகம்
160. நாங்கூழ்ப்புழு – மண்புழு
161. பாடு – உழைப்பு
162. ஓவா – ஓயாத
163. வேதித்து – மாற்றி

12ஆம் வகுப்பு

1. புதுபெயல் – புதுமழை
2. ஆர்கலி – வெள்ளம்
3. கொடுங்கோல் – வளைந்த கோல்
4. புலம்பு – தனிமை
5. கண்ணி – தலையில் சூடும் மாலை
6. கவுள் – கன்னம்
7. மா – விலங்கு
8. அமலன் – இராமன்
9. இளவல் – தம்பி
10. நளிர்கடல் – குளிர்ந்த கடல்
11. துன்பு – துன்பம்
12. உன்னேல் – எண்ணாதே
13. அனகன் – இராமன்
14. உவா – அமாவாசை
15. உடுபதி – சந்திரன்

16. செற்றார் - பகைவர்
17. கிளை - உறவினர்
18. வாயிலோயே - வாயில் காப்போனே
19. வள்ளியோர் - வள்ளல்கள்
20. வயங்குமொழி - விளங்கும் சொற்கள்
21. வித்தி - விதைத்து
22. உள்ளியது - நினைத்தது
23. உரன் - வலிமை
24. வறுந்தலை - வெறுமையான இடம்
25. காவினெம் - கட்டிக்கொள்ளுதல்
26. கலன் - யாழ்
27. கலப்பை - கருவிகளை வைக்கும் பை
28. மழு - கோடரி
29. மலிவிழா - விழாக்கள் நிறைந்த
30. மடநல்லார் - இளமை பொருந்திய பெண்கள்
31. கலிவிழா - எழுச்சி தரும் விழா
32. பலிவிழா - திசைதோறும் பூசையிடும் உத்திரவிழா
33. ஒலிவிழா - ஆரவார விழா
34. வேட்டம் - மீன் பிடித்தல்
35. கழி - உப்பங்கழி
36. செறு - வயல்
37. கொள்ளை - விலை
38. என்றூழ் - சூரியனின் வெப்பம்
39. விடர் - மலைவெடிப்பு
40. கதழ் - விரைவு
41. உமணர் - உப்பு வணிகர்
42. எல்வளை - ஒளிரும் வளையல்
43. தெளிர்ப்ப - ஒலிப்ப
44. விளிஅறி - குரல்கேட்ட
45. ஞமலி - நாய்
46. வெரீஇய - அஞ்சிய
47. மதர்கயல் - அழகிய மீன்
48. புனவன் - கானவன்
49. அள்ளல் - சேறு
50. பகடு - எருது
51. புரிஞெகிழ் - சுருண்ட கூந்தல்

Chima

Date :

Page :

52. கழை - மூங்கில்
53. கண் - கணு
54. விரல் - ஆடவர் கைப் பெருவிரல்
55. உத்தரப் பலகை - மேல் இடும் பலகை
56. பூதர் - ஐம்பூதங்கள்
57. ஓவிய விதானம் - ஓவியம் தீட்டப்பட்ட பந்தல்
58. நித்திலம் - முத்து
59. விருந்து - புதுமை
60. மண்ணிய - கழுவிய
61. நாவலம்பொலம் - சாம்பூநதம் என்னும் உயர்ந்த வகைப் பொன்
62. தலைக்கோல் - நாடகக் கணிகையர் பெறும் பட்டம்
63. ஓடை - முக படாம்
64. அரசு உவா - பட்டத்து யானை
65. பரசினர் - வாழ்த்தினர்
66. பல்லியம் - இன்னிசைக் கருவி
67. குயிலுவ மாக்கள் - இசைக் கருவிகள் வாசிப்போர்
68. தோரிய மகளிர் - ஆடலில் தேர்ந்த பெண்கள்
69. வாரம் - தெய்வப்பாடல்
70. ஆமந்திரிகை - இடக்கை வாத்தியம்
71. இலைப்பூங்கோதை - அரசன் அணிந்துள்ள பச்சைமாலை
72. கழஞ்சு - ஒரு வகை எடை அளவு
73. நகை - சிரிப்பு
74. இளிவரல் - சிறுமை
75. மருட்கை - வியப்பு
76. பெருமிதம் - பெருமை
77. வெகுளி - சினம்
78. உவகை - மகிழ்ச்சி
79. கைந்நெல் - விளைந்த நெல்
80. மா - ஒரு நில அளவு (ஓர் ஏக்கரில் மூன்றில் ஒரு பங்கு)
81. செறு - வயல்
82. தமித்து - தனித்து
83. புக்கு - புகுந்து
84. யாத்து - சேர்த்து
85. நந்தும் - தழைக்கும்
86. வரிசை - முறைமை

87. கல் - ஒலிக்குறிப்பு
88. பரிவு - அன்பு
89. தூய - கெட
90. பிண்டம் - வடி
91. நச்சின் - விரும்பினால்
92. உன்னலிர் - எண்ணாதீர்கள்
93. பிணித்தமை - கட்டியமை
94. நீசு - இழிந்த
95. நேசம் - அன்பு
96. வல்லியதை - உறுதியை
97. ஓர்மின் - ஆராய்ந்து பாருங்கள்
98. பாதகர் - கொடியவர்
99. குழுமி - ஒன்றுகூடி
100. பழிப்புரை - இகழ்ச்சியுரை
101. ஏதமில் - குற்றமில்லாத
102. ஊன்ற - அழுந்த
103. மாற்றம் - சொல்
104. நுவன்றிலர் - கூறவில்லை
105. ஆக்கினை - தண்டனை
106. நிர்ணயம் - உறுதி
107. கூவல் - கிணறு
108. நொண்ணைமோ - சூழுமோ
109. உததி - கடல்
110. ஒடுக்க - அடக்க
111. களைந்து - கழற்றி
112. திகழ - விளங்க
113. செர்த்தினர் - உடுத்தினர்
114. சிரத்து - தலையில்
115. பெய்தனர் - வைத்து அழுத்தினர்
116. கைத்துறும் - கையில் கொடுத்திருந்த
117. கண்டகர் - கொடியவர்கள்
118. வெய்துற - வலிமை மிக
119. வைதனர் - திட்டினர்
120. மறங்கொள் - முரட்டுத் தன்மையுள்ளவர்.
121. மேதினி - உலகம்
122. கீண்டு - பிளந்து

123. வாரிதி - கடல்
124. சுவறாதது - வற்றாதது
125. வல்லானை - வலிமை வாய்ந்தவரை
126. நிந்தை - பழி
127. பொல்லாங்கு - கெடுதல், தீமை
128. வளமலை - வளமான மலை (மலைநாடு)
இன்று பழநி மலை என்று அழைக்கப்படுகிறது.
129. குவாஅன் - மலைப்பக்கம்
130. கலிங்கம் - ஆடை
131. சுரும்பு - வண்டு
132. நாகம் - சுரபுன்னை
133. பிறங்கு - விளங்கும்
134. பறம்பு - பறம்பு மலை
135. கறங்கு - ஒலிக்கும்
136. வாலுளை - வெண்மையான தலையாட்டம்
137. மருள - வியக்க
138. நிழல் - ஒளி வீசும்
139. நீலம் - நீலமணி
140. ஆலமர் செல்வன் - சிவபெருமான் (இறைவன்)
141. அமர்ந்தனன் - விரும்பினன்
142. சாவம் - வில்
143. மால்வரை - பெரியமலை (கரிய மலையுமாம்)
144. கரவாது - மறைக்காது
145. தஞ்சு - தங்கி
146. நளிசினை - செறிந்த கிளை
147. போது - மலர்
148. கஞலிய - நெருங்கிய
149. நாகு - இளமை
150. குறும்பொறை - சிறு குன்று
151. கோடியர் - கூத்தர்
152. மலைதல் - போரிடல்
153. உறழ் - செறிவு
154. நுகம் - பாரம்